அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை இல. 2/94(ii)

எனது இல. II/719/E/302/115
அரசாங்க நிருவாக, உள்நாட்டலுவல்கள்,
பெருந்தோட்டக் கைத்தொழில், பாராளுமன்ற அலுவல்கள்
அமைச்சு,
சுதந்திர சதுக்கம், கொழும்பு 07,
1995, பெப்ருவரி மாதம் 07 ஆந் திகதி.

செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள் அனைவருக்கும்,
அரசாங்க கூட்டுத்தாபனங்கள், சட்ட நியதிச் சபைகளின்
தலைவர்களுக்கும்.

## செய்முறை பயிற்சிக் காலத்தை நீடித்தல்

தொழில் நுட்பக் கல்லூரிகள் மற்றும் அது போன்ற பயிற்சி நிறுவனங்களில் பாடநெறியின் ஒரு பகுதியாக செய்முறைப் பயிற்சிப் பெறுவதற்காக அரச நிறுவனங்களில் இணைக்கப்பட்டுள்ள அனைத்து செய்முறைப் பயிற்சியாளர்களினதும் பயிற்சிக் காலம் ஆறு (6) மாதங்களுக்கு வரையறுக்கப்பட வேண்டும்.

02. 06 மாத காலங்கள் கடந்தும் தற்போது பயிற்சி பெறுவதில் ஈடுபட்டுக்கொண்டிருக்கும் அனைவரினதும் பயிற்சிக்காலம் உடனடியாக செயற்படும்வண்ணம் நிறுத்தப்படவேண்டும். 1995-02-28 ஆந் திகதிக்கு ஆறு மாத காலத்தைக் கடந்தும் பயிற்சிப் பெறும் எவரும் அலுவலகங்களில் இருத்தலாகாது என்பதுடன் அவர்களுக்கு செலுத்தல்கள் செய்யப்படலாகாது. இது தொடர்பில் நிறுவனத் தலைவர்கள் பொருப்பாக இருத்தல் வேண்டும்.

03. 2/94(I) ஆம் இலக்க 1994-06-13 ஆந் திகதிய அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை இத்தால் இரத்துச் செய்யப்படுகின்றது.

ஒப்பம் / ஆர்.எஸ். ஜயரத்ன
செயலாளர்
அரசாங்க நிருவாக, உள்நாட்டலுவல்கள்,
பெருந்தோட்டக் கைத்தொழில், பாராளுமன்ற
அலுவல்கள் அமைச்சு.